# மின்நிலா

**ஜனவரி 18 2021**



நிலவை நெருங்குமா இந்த
நீலப் பறவை ?
உயர்ந்த நோக்கம் இருந்தால்
உயரம் ஒரு பொருட்டல்ல !

**மின்நிலா 035**

**எங்கள் ப்ளாக் பதிவுகளின் வாராந்திர தொகுப்பும், மற்றும் சில சுவையான பகுதிகளும், படங்களும் ... இந்த மின்நிலா புத்தகத்தைப் பற்றிய உங்கள் கருத்துகளையும், யோசனைகளையும் ...**

engalblog@gmail.com

**என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும். நன்றி.**

**Layout by : KGG**

**============**

**ஆசிரியர்கள் :**

**B SRIRAM**

**K G GOUTHAMAN**

**KAYJEE**

**K G Y RAMAN**

**K S**

மின்நிலா 034 ((முந்தைய இதழ் சுட்டி)

**மின்நிலா தீபாவளி மலர் 2020 சுட்டி**

**மின்நிலா பொங்கல் மலர் 2021 சுட்டி**

# பொருளடக்கம்

**படைப்பாளிகள் அரங்கம்** ....................3

**ரவா ஜாமுன் - நெல்லைத்தமிழன் ரெஸிப்பி** ....................8

**மறக்கவியலாத சிறுகதை - சீட்டு - அப்பாதுரை** ....................13

கேள்வி பதில்கள் ....................17

எங்கள் ஆசிரியர்கள் மின்னூல்கள் ....................26

கதம்பம் : ஸ்ரீராம் ....................28

படம், பாட்டு, தகவல் & காணொளி :: ஸ்ரீராம் ....................37

**நல்ல செய்திகள்** ....................40

**பேசும் படங்கள் :: kayjees** ....................46

## படைப்பாளிகள் அரங்கம்

படத்துக்கு கதை . கவிதை மற்றும் படைப்பாற்றல் திறன்

**இங்கே நான் கொடுத்துள்ள படத்தைப் பாருங்கள்.**



**இதைப் பின்னணியாகக் கொண்டு கதை / கவிதை / கட்டுரை ஏதாவது எழுதி அனுப்புங்கள். படம் வரையும் திறமை உள்ளவர்கள், இந்தப் படத்தை காப்பி செய்து, அதனோடு உங்கள் கற்பனைக் கோடுகள், வண்ணங்கள், வடிவங்கள் சேர்த்து அனுப்பலாம்.**

**அந்தப் படத்தை வைத்து, இது ஒரு படைப்பு.**




உங்கள் கற்பனைகளையும், படைப்புகளையும் எங்களுக்கு அனுப்புங்கள்.

**வாசகர்கள் அனுப்பியுள்ள சில படைப்புகள் :**

## மின்நிலா 035

**1 ) மோ. தில்லைநாயகம் :**



## மின்நிலா 035

**வல்லிசிம்ஹன் :**

1 ) **மரத்தில் படர இயலாத கொடி**
**தன் இலைகளை ஜன்னல் திரையில்**
**பரவ விட்டதோ!!!**

2 ) **கத்திரிக் கோலைக் கண்டதும்**
**துள்ளி விலகும் இளந்தளிர்கள்.**

**நெல்லைத் தமிழன் :**

**மரங்கள் வளர்ப்போம் மரங்கள் வளர்ப்போம்**
**என்பதைத் தவறாகப் புரிந்துகொண்டு**
**இலைகள் செடிகள் படங்களாக**
**படுக்கை விரிப்பில் பிரிண்ட் பண்றாங்களே.**

**துரை செல்வராஜூ :**
**விதைக்குள் தான்**
**விழுது மரம்..**
**வெட்டுகிற கோடரி**
**அறிவதில்லை..**

**படம் என்றாலும்**
**பசுமை என்பதை**
**கத்தரிக்கும் கத்தரியும்**
**கற்றிருப்பதில்லை . . .**

அடுத்த படைப்பு - அடுத்த பக்கத்தில்

மின்நிலா வலைப்பூ சுட்டி

## மின்நிலா 035




[மீண்டும் முதல் பக்கம் செல்ல --]

# ரவா ஜாமுன் - நெல்லைத்தமிழன் ரெஸிப்பி

இதனை இணையத்தில் எங்கோ படித்தபோது குறிப்பு எடுத்துவைத்துக்கொண்டேன். எந்தத் தளம் என்பது மறந்துவிட்ட து. கடையில் ஜாமூன் மிக்ஸ் வாங்கி ஜாமூன் செய்வதற்குப் பதிலாக இதனைச் செய்துபார்க்கலாமே என்று நினைத்து, கிச்சன் என் வசம் வந்த அன்று செய்தேன்.

தேவையானவை:
ரவை 1 கப்
6-7 முந்திரியை அரைத்த பவுடர்
காய்ச்சின பால் 2½ கப்
ஜீனி 1 கப்
தண்ணீர் 1 கப்
ஏலக்காய் தூள், நெய் 1 ஸ்பூன்
பொரிக்கத் தேவையான எண்ணெய்

செய்முறை:
ரவை பெரிதாக இருந்தால் மிக்சியில் ஒரு சுற்று சுற்றிக்கொள்ளவும். கடாயில் ரவையை வெறும்ன வறுக்கவும். நிறம் மாறக்கூடாது. அத்துடன் முந்திரி பவுடர் சேர்க்கவும்.

ஒரு நிமிடம் வறுபட்ட தும், அடுப்பை மீடியமில் வைத்து, காய்ச்சின பாலைச் சேர்த்துக் கலக்கவும். கட்டிகள் இருக்க க்கூடாது. நன்றாக கிளறி, ரவை, பாலை எல்லாம் உறிஞ்சிய பிறகு அடுப்பை அணைத்து கலவையை ஆறவிடணும்.

இன்னொரு கடாயில் ஜீனியும் தண்ணீரும் சேர்த்து, சர்க்கரைப் பாகு தயார் செய்யணும். பாகு பிசுபிசுப்பாக இருந்தால் போதும். அதில் வாசனைக்கு ஏலக்காய் தூள் சேர். அதற்குப் பதில் வெனிலா அல்லது ரோஸ் எஸென்ஸும் சேர்க்கலாம்.

ரவை கலவை ஆறின பிறகு, 1 ஸ்பூன் நெய் விட்டு அழுத்தி சா:ப்ட் ஆகப் பிசையவும். அதில் ஒரு பகுதியை சப்பாத்திக் கல்லில் அரை இஞ்ச் தடிமனில் இட்டு, ஒரு வட்டக் கிண்ணம் அல்லது மூடியினால் வட்ட வட்ட பிஸ்கட் சைஸில் பாதுஷா போல கட் செய்யவும். இப்படியே மொத்த கலவையையும் பிஸ்கட்டுகளாகச் செய்துவைத்துக் கொள்ளவும்.

பிஸ்கட்டுகளின்மீது :போர்க்கினால் சிறிய துளைகள் போட்டுக்கொள்ளவும். இது பொரியும்போது உப்பக்கூடாது என்பதற்காக.

எண்ணெய் நன்கு சூடானதும், மிதமான தீயில் Golden Brown நிறத்துக்கு பொரித்தெடுக்கவும்.

எடுத்ததை, உடனே தயார் செய்துவைத்திருக்கும் சூடான சர்க்கரைப் பாகில் பத்து நிமிடங்கள் போடவும். பாகு உள்ளே புகுந்து நன்கு ஜாமூன் மாதிரி ஊறியிருக்கும்.





















## மின்நிலா 035

**இந்த இனிப்பு பரவாயில்லாமல் இருந்தது. ரவா ஜாமூனில், என்னவோ மிஸ்ஸிங் என்று தோன்றியது. ரொம்ப மெதுவாகத்தான் செலவழிந்தது. மகள், பிளாண்டாக இருக்கிறது என்று சொன்னாள். கொஞ்சம் இனிப்பு கோவா சேர்த்திருக்கலாமோ என்று தோன்றியது. பார்வைக்கு ரொம்ப அழகான ஸ்வீட். இனிப்பு கோவா சேர்த்துச் செய்து பாருங்கள்.**

இந்தப் பதிவின் கருத்துரைகளைப் படிக்க : சுட்டி

**மீண்டும் முதல் பக்கம் செல்ல இங்கே கிளிக்குக**

## மின்நிலா 035

# மறக்கவியலாத சிறுகதை - சீட்டு - அப்பாதுரை

சித்திரை மாதம் முதல் நாள். அதிகாலை ஆறு மணி இருக்கும். “விடிஞ்சா சித்திரை டோய்.. விசால நித்திரை டோய்” என்று ஏதோ முணுத்தபடி நல்லசிவம் பெரிய மரப்பெட்டியை எடுத்து ஒற்றை மாட்டு வண்டியில் வைக்க முயன்றார். பின்னால் ஓடி வந்த நரசிம்மன் பெட்டியின் பூட்டை அசைத்துப் பார்த்து “பூட்டியிருக்கு” என்றார். “ஆமாய்யா, என்னை நம்பலியா?” என்று சிரித்த நல்லசிவம் மறுபடி பெட்டியைத் தூக்கினார். “ஆச்சுயா, இதான் கடைசி பெட்டி..” என்று வண்டியில் இருந்த மற்ற நான்கு வரிசைகளைக் காட்டினார். வரிசைக்கு ஆறு என்று இருபத்து நாலு சிறிய பெட்டிகளைச் சுட்டினார். வண்டியில் பூட்டியிருந்த காளை ஏனோ முரண்டது. “ஹீய் ஹேய் ஹௌவ்” என்று ஏதோ கூவியபடி காளையைத் தட்டிக் கொடுத்து வண்டியின் பாரத்தைச் சீராக்கினார் நரசிம்மன். பெட்டியை ஏற்றி வைத்து நல்லசிவம் பின்னால் உட்கார்ந்ததும் தானும் வண்டியின் முன்பகுதியில் உட்கார்ந்தார். சிவன் கோவில் மண்டபம் வரை சீராகச் சென்ற வண்டி சொல்லி வைத்தாற்போல் நின்றது. பெரிய பெட்டியை இறக்கி வைத்த நல்லசிவம், நரசிம்மனின் உதவியுடன் பெட்டியை மண்டப மேடையின் நடுவில் வைத்தார். இருவரும் மற்ற இருபத்து நான்கு பெட்டிகளையும் எடுத்து வந்து அருகில் வைத்தனர். ஒரு முறைக்கு இரு முறை அனைத்துப் பூட்டுக்களையும் ஒவ்வொன்றாக இழுத்துப் பார்த்த நரசிம்மன், "நான் சாட்சி நமசிவாயம்" என்றார் சிவன் சன்னதியைப் பார்த்து. தானும் சிவனைப் பார்த்து கும்பிட்டு "நான் சாட்சி நமசிவாயம்" என்றார் நல்லசிவம்.

மாட்டை வண்டியிலிருந்து கழற்றி கழனித்தொட்டி அருகே கட்டி வந்தார் நரசிம்மன். "மத்த கிராமத்துல இப்பல்லாம் எறிநாள் விரயம்னு பேசிக்கிறாங்க அண்ணாச்சி" என்றார்.

"ஆமாய்யா.. ஜனங்க இப்பல்லாம் நாகரிகம் அது இதுனு எதையோ சொல்லிக்கிட்டு திரியறாங்க.. நேத்து இன்னி வழக்கமாயா.. எறிநாள் எங்க முப்பாட்டனுக்கு நாலு முப்பாட்டன் அவனுக்கும் முப்பாட்டன்

காலத்துலந்து நடக்குது.. அவங்க அறியாத நாகரிகமா.. எறிச்சீட்டு போட்டுப் பாக்காத வருசம் இல்லை பாத்துக்க.. இந்த நமசிவாயம் சாட்சி.. என்னமோ நேத்துப் பொறந்துட்டு நாலெழுத்து படிச்சதும் பாரம்பரியத்தை மறந்துடறாங்க.." என்று காசித்துண்டை உதறித் தரையில் விரித்து உட்கார்ந்தார் நல்லசிவம்.

"வெத்ல போடறிங்ளா?" என்று அவரருகே உட்கார்ந்த நரசிம்மன் தன்னிடமிருந்த வெற்றிலைப் பெட்டியை நீட்டினார். இருவரும் கிராம மக்கள் குழுமக் காத்திருந்தனர்.

ஏழரைக்கு கிராமத்தினர் குழுமத் தொடங்கினர். மொத்தம் இருபத்து நாலு குடும்பங்கள். ஒவ்வொரு குடும்பத்தினரும் கையில் ஒரு பையுடன் வந்திருந்தனர்.

சரியாக எட்டு மணிக்கு "பூட்டிழுக்க யாரு வராங்க?" என்றார் நரசிம்மன். "நான்" என்று முன்வந்த விடலைகளில் கோடித்தெரு ராஜேஸ்வரன் முந்திக்கொண்டான். "இன்னிக்கு எம்பொறந்த நாளு" என்றான் உற்சாகமாக. "சரி சரி வாடா சிங்காரம்" என்று அவனை அழைத்தார் நல்லசிவம். மேடையேறி வந்த ராஜேஸ்வரன், "எல்லாப் பெட்டியும் பூட்டியிருக்கு" என்று இழுத்துப் பார்த்துச் சொன்னான். "போய்க்கடா" என்றார் நல்லசிவம். கூட்டத்தில் சேர்ந்து கொண்டான் ராஜேஸ்வரன்.

நரசிம்மன் அத்தனை பூட்டுக்களையும் சாவியுடன் களைந்து, பெரிய பெட்டியைத் திறந்து எல்லாரும் பார்க்கக் காட்டினார். வெள்ளைக் காகிதச் சுருள்கள். எறிச் சீட்டுக்கள். பெட்டியின் நடுவில் ஒரு பெரிய மரக்கரண்டியை வைத்துக் கிளறினார். "நமசிவாயம் துணை. நல்ல கணேசன் துணை, நாலு தோள் நாராயணன் துணை, அச்சமகல அம்மன் துணை, ஆறுமுகன் அவனே துணை" என்று உயர உயர இன்னும் உயரமாகக் கை தூக்கிக் கும்பிட்டார். கிராமத்தினரும் சேர்ந்து கொண்டனர்.

"தயாரா?" என்றார் நல்லசிவம். தங்கள் பைகளைத் தொட்டுக்காட்டிய குடும்பத்தினர் "தயார்" என்றனர்.

"வாங்க.. வந்து கிளறுங்க" என்ற நரசிம்மன் கரண்டியைப் பிடித்து பெட்டியிலிருந்த சீட்டுக்களை ஒரு பெரிய கிளறாகக் கிளறி ஒதுங்கினார். பிறகு நல்லசிவம். தொடர்ந்து குழுமியிருந்த மற்ற அத்தனை பேரும் முறையாகப் பெட்டியைச் சுற்றி வந்து சீட்டுக்கள் பெட்டியிலிருந்து விழாமல் கவனமாகக் கிளறி ஒதுங்கினர்.

"வீட்டுத் தலையாள் வந்து சீட்டெடுங்க" என்றார் நல்லசிவம். இருபத்து நாலு குடும்பங்களின் மூத்த ஆசாமிகள், ஆணோ பெண்ணோ, வந்து ஆளுக்கு ஒரு சீட்டெடுத்து ஒதுங்கினர்.

"கரும்பொட்டு யார் கிட்டனு பாத்து சொல்லுங்க" என்றார் நல்லசிவம்.

சீட்டைப் பிரித்துப் பார்த்தவர்களில், "எங்கிட்ட இருக்குண்ணே கருஞ்சீட்டு" என்றார் கோடித்தெரு கணபதிசாமி. அவர் பொதுவாகப் பிரித்துக் காட்டிய சீட்டின் நடுவில் கரும்பொட்டு இருந்தது.

நரசிம்மன் விரைந்து இருபத்து நாலு பெட்டிகளில் தேடி கணபதிசாமி என்று பெயர் எழுதியிருந்த பெட்டியை எடுத்து வந்தார். "வாங்கண்ணே, வந்து குலுக்குங்க" என்றார். கணபதிசாமி முன்வந்து பெட்டியை நன்றாகக் குலுக்கித் தரையில் வைத்தார். நரசிம்மனிடம் சாவியை வாங்கித் திறந்து உள்ளிருந்து ஒரு சீட்டை எடுத்து ஒதுங்கி நின்றார். "வாங்க வரிசையா" என்று தன் குடும்பத்தாரை அழைத்தார். வந்த நால்வரும் ஆளுக்கு ஒரு சீட்டு எடுத்து ஒதுங்கினர்.

"கரும்பொட்டு யார் கிட்டனு பாத்து சொல்லுங்க" என்றார் நல்லசிவம். சீட்டைப் பிரிக்கையில் சட்டென்று ராஜேஸ்வரன் "எங்கிட்ட இருக்கு கருஞ்சீட்டு" என்று குதித்தான்.

தன் குடும்பத்தில் பிறரை இழுத்துக் கொண்டு ஒதுங்கினார் கணபதிசாமி. "ஐயோ! அவன் குழந்தை.. எட்டு வயசு.. பிறந்த நாள்

**அதுவுமா.. வேணாம்.. அவனுக்கு பதிலா என்னை நடுவுல தள்ளுங்க" என்ற மனைவியை அடக்கினார்.**

**கிராமத்தினர் தங்கள் பைகளிலிருந்து ஆளுக்கு ஒன்றிரண்டு பெரிய கற்களை எடுத்து ராஜேஸ்வரன் மீது வீசுவதற்காக அவனைச் சூழ்ந்தனர்.**

***

1948ல் The New Yorker பத்திரிகையில் வெளியான The Lottery என்ற சிறுகதை. ஷர்லி ஜேக்சன் எழுதிய இந்தச் சிறுகதை சென்ற நூற்றாண்டின் மிகச் சிறந்த சிறுகதைகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. படிக்கச் சுலபமாக இருக்கவேண்டி என் பாணியில் தமிழ்ப்படுத்தியிருக்கிறேன். (கதையின் கரு கலைக்கப்படவில்லை என்று நம்புகிறேன். அசல் கதை படித்தவர்களும் படிக்கப் போகிறவர்களும் ஒப்பவில்லையெனில் நானெடுத்துக்கொண்ட உரிமைக்கு மன்னிக்க வேண்டுகிறேன்).

கதை வெளியான புதிதில் ஷர்லி ஜேக்சனுக்கும் ந்யூ யார்கர் பத்திரிகைக்கும் கண்டனங்கள் நிறைய வந்தன. தனிப்பட்ட நிலையில் சுயமாகச் சிந்தித்து செயல்படும் மனித மனம், குழுவாக இருக்கையில் தனித்துவத்தை இழந்து குழுவின் சிந்தனைக்குக் கட்டுப்படுகிறது என்ற கருத்தை வெளிப்படுத்த விரும்பியதாக விளக்கம் சொன்னார் ஷர்லி ஜேக்சன்.

வெளிவந்த கட்டத்தில் கடுமையாக விமரிசிக்கப்பட்டாலும் காலப் போக்கில் இந்தக் கதையின் ஆழமும் பரிமாணங்களும் பலவிதமாக அளக்கப்பட்டிருக்கின்றன. சிறுகதையின் கடைசி வரியில் அவர் எழுதிய "they were upon her" அமெரிக்கச் சிறுகதை உலகின் மிகப் பிரபலமான கடைச் சொற்களாகக் கருதப்படுகின்றன.

இந்தப் பதிவின் கருத்துரைகளைப் படிக்க : [சுட்டி]

[மீண்டும் முதல் பக்கம் செல்ல இங்கே கிளிக்குக]

# கேள்வி பதில்கள்

**ஏஞ்சல் :**

**1, எதிர்மறை விஷயங்கள் செய்திகள் எதுவும் சிலருக்கு பார்க்கவோ கேட்கவோ பிடிப்பதில்லை இதன் காரணம் என்னவா இருக்கும் ?**

**# "கண்ணே நல்வாக்கு நீ சொல்லடி" எனும் சென்டிமென்ட்டுக்கு எதிர்த்துணை உணர்ச்சி. பிடித்ததை நாடுவதும் பிடிக்காததை ஒதுக்குவதும் மனித இயல்பு.**

**& இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று**

(அதிகாரம்:**இனியவை கூறல்** குறள் எண்:100)
**நேர்மறை செய்திகள் இனியவை. எதிர்மறை செய்திகள் இன்னா**

**2, The Greatest Showman இந்த ஆங்கிலப்படத்தை தமிழில் ரிமேக்கினால் யார் அந்த Hugh Jackman கேரக்டருக்கு பொருத்தமாக இருப்பார் ?**
**A , சித்தப்பா ரஜினி**
**B , அங்கிள் கமல் இந்த படத்தை கண்டிப்பாக பார்த்துவிட்டு பதில் சொல்லவும் :))))))))))**

**# படம் பார்க்க முயற்சிக்கிறேன். பின்னர் பதில் சொல்கிறேன். ரஜினி கமலைத் தாண்டி நல்ல நடிகர்கள் கிடையாதா என எதிர்க்கேள்வியைக் கேட்டு வைக்கிறேன்.**

**& அது யாரு அந்த Hugh Jackman என்று தேடிப்பார்த்தேன். The Greatest Showman கதையையும் படித்துப் பார்த்தேன்.**

**கதையைப் படித்தால் 'பறக்கும் பாவை' சினிமா ஞாபகம் வந்தது. ஸ்டில் படத்தைப் பார்த்தால்,**






' அன்பே வா ' எம்ஜியார் போல போஸ் கொடுக்கிறார். ஆக, 'சி ர / அ க' இருவருமே இந்த கேரக்டருக்குப் பொருத்தம் இல்லை.

3, எத்தனையோ வாத்தியக்கருவிகள் இருக்க நம் அன்றாட வாழ்வில் //ஜால்ரா // மட்டும் அடிக்கடி இடம்பெறுவதேன் ??

# விலை மலிவு கற்பதெளிது ஆமோதிப்பு=காரியசித்தி.

& ஜால்ரா போடுவது மற்றவர்களைப் பார்த்தே போடத் தெரிந்துகொள்ளலாம். தெரிந்துகொண்டு ஜால்ரா போடுவதால் ஆதாயங்கள் அதிகம்.




4, கோவிட் VACCINE பற்றி உங்கள் கருத்து ?

# தயக்கம் அச்சம். போடத்தான் வேண்டுமா என்ற வினா.
& ஏதோ எல்லோருக்கும் பயன்பட்டால் சரிதான்.

5, இளைய தலைமுறை மூத்த தலைமுறையைவிட விட சில விஷயங்களில் அவதானமாக விழிப்புடன் இருக்கிறார்கள் என்பதில் உடன்படுகிறீர்களா ?

# கெட்டிக்காரர்களாக இருக்கிறார்கள், எச்சரிக்கையாக இல்லையோ என்று தோன்றுகிறது.

& அந்த 'சில விஷயங்கள்' என்னென்ன என்று சொல்லிவிடுங்களேன்!

6, நிஜ வாழ்க்கை உலகம் என்பது வேறு ஆனால் அடிக்கடி மக்கள் போலியான விஷயங்களில் திசை திருப்பப்படுவதன் காரணம் என்ன ?

# கவர்ச்சி, உடனடித் திருப்தி - சந்தோஷத்தில் நாட்டம் ஆகியவற்றின் ஈர்ப்பு சக்தி மிக்க வலுவானது.

& நிஜ வாழ்க்கை உலகம் - அன்றாடம் அனுபவிக்கும் / அவதிப்படும் சமாச்சாரம். போலியான விஷயம் - என்பது ஒரு மாற்றத்திற்காக மன சந்தோஷத்திற்காக நாம் காணும் சினிமா போல.

7, Thug Life ..எல்லாருக்கும் வாழ்க்கையில் ஒரு சிறு ரௌடி பேபி அல்லது ரௌடி பையன் // நானும் ரவுடிதான் மொமெண்ட் .. அனுபவமாவது இருந்திருக்கும் .அப்படி உங்கள் வாழ்க்கையில் நடந்த ஒரு சம்பவம் எதாவது இருக்கா ?

# இருக்கிறது ஆனால் சொல்லத் தரமில்லாததாக..

& எல்லாம் இப்போ மறந்து போச்சு!

8, ஸ்கூல் படிக்கும்போது செய்த சில அற்ப விஷயங்கள் இப்போ படு அற்பத்தனமா தோணுது உங்களுக்கு அப்படிப்பட்ட அனுபவங்கள் இருக்கா ?.உதாரணத்துக்கு ஒரு ரூபா காயின் போட்டு சும்மா தோணின நம்பருக்கு கால்போட்டு பேசியிருக்கோம் நானும் தோழிகளும்.இப்போ நினைச்சா அது தப்புன்னு தோணுது ..

# என் பள்ளி வாழ்க்கை கல்வி தாண்டிய நடவடிக்கை முற்றும் அற்றதாக இருந்தது.

& ஸ்கூலுக்குப் பக்கத்தில் உள்ள தோட்டங்களில் (ஊட்டி பக்கத்தில் படித்த சமயம் ) முள்ளங்கி, உருளைக்கிழங்கு, வால்பேரி போன்ற பல விஷயங்களை கூட்டமாக போய் திருடித் தின்றது. ஜூனியர் டெக்னிகல் ஸ்கூல் படித்த சமயத்தில் மாங்காய் / கொய்யா தோப்புகளில் பறித்துத் தின்ற மாங்காய் / கொய்யாக்காய் எல்லாம்

நினைவில் இருக்கு. பறித்து சாப்பிடுவோமே தவிர வேறு லாப நோக்கம் எதுவும் கிடையாது.

**9, திருப்தியடைதல் / போதும் என்ற மனம் என்பது சிலருக்கு மட்டும் மிகவும் கடினமான ஒன்றாக இருக்கே அது ஏன் ?**

# திருப்தி தேடுகிற நபரின் ஆசைகளின் ஆழம், தீவிரம் ஆகியவற்றின் அடிப்படையில் வேறுபடும்.

& ஆசை துறந்தால் அகிலம் உனக்கு + ஆசையே துக்கத்திற்குக் காரணம் என்றெல்லாம் அந்த நாட்களில் சொன்னார்கள். இப்போ சிலர், 'அத்தனைக்கும் ஆசைப்படு' என்கிறார்கள். சுயமாக சிந்திப்பவர்கள் இதில் எதிலும் சிக்காமல் அளவோடு ஆசைப்பட்டு, ஆசைப்பட்டது கிடைக்கவில்லை என்றாலும் மனதைத் தேற்றிக் கொண்டுவிடுவார்கள்.

**10, சில விஷயங்கள் தவறு ஆனாலும் சிலநேரம் சரியாக மனசுக்கு தோணும் அப்படி உங்களுக்கு தோணியிருக்கா ?**

# பல முறை அன்றாடம்.

& மீண்டும் அந்த சில விஷயங்கள் என்ன என்று சொல்லிடுங்க!

**11, உலகமே பயத்துடன் அடுத்த நாளை எப்படியிருக்குமோ என எதிர்நோக்கி காத்திருக்கும் வேளையில் சென்னை சினிமா தியேட்டர்கள் திறப்பது அத்யாவசியமா ??**

# நிச்சயமாக இல்லை தான். ஆனால் ஆயிரக் கணக்கான குடும்பங்களின் வாழ்வாதாரம் எனும் உண்மை யோசிக்க வைக்கிறது.

& இல்லை.

12, சிலர் மட்டும் எப்பவும் ஒருவித வன்மம் ,குரோதம் ,வெறுப்பு ,ஆக்ரோஷம் போன்ற பிசாசு குணங்களுடன் திரிவதேன் ?இது பிறப்பால் அமைந்ததா ? அல்லது சூழ்நிலைகளால் அமைந்ததா ?

# எல்லாவற்றுக்கும் மனோதத்துவ அடிப்படையில் காரணம் இருக்கும். அவர்களுக்கே தெரியாமல் கூட இருக்கலாம்.

& சூழ்நிலைகளால் அமைவது.

நெல்லைத்தமிழன் :

1. நமக்குச் சம்பந்தமில்லாதவரது மரணம் நம்மை பாதிப்பது ஏன் ?
# 'நமக்கும் இதுதான் ஒரு நாள்' என உள்மனதில் தோன்றுவதால் தான்.

& நம்முள் இருக்கின்ற இரக்க உணர்ச்சிதான் காரணம்.

2. எந்த ஒரு துக்க நிகழ்வும் வெகு சீக்கிரமே நம் மனதால் மறக்கப்பட்டு அதன் தாக்கம் போய்விடுவது எப்படி?

# எதனுடைய தாக்கமானாலும் (நல்லதோ அல்லாததோ) காலக்கிரமத்தில் வீரியம் தேய்ந்து நினைவாக மட்டும் இருப்பது மனதின் படைப்புத் தத்துவம். அது ஒரு வரப்பிரசாதம்.

3. ஒரு நண்பர், உங்களை வாங்கன்னு ஒரு ஹோட்டலுக்குக் கூட்டிச் சென்றால் நீங்கள் முதலில் ஆர்டர் செய்வது எது?

# சூடாக பஜ்ஜி/போண்டா/வடை. குடிக்க வெந்நீர்.

& யார் கூட்டிச் செல்கிறார்களோ அவர்களுடைய choice ல விட்டுவிடுவேன். அவர்தானே பணம் கொடுப்பவர். அவருடைய நிதி நிலைமை + மன நிலை தெரியாமல் நான் எதையும் ஆர்டர் செய்யமாட்டேன். எங்கள் நண்பர்களிடையே எழுதப்படாத ஒப்பந்தம்

- யார் அழைக்கிறார்களோ அவர்கள்தான் பில் தொகை செலுத்தவேண்டும்.

**4. திருமணத்துக்குப் பெண் பார்த்த அனுபவம் பகிரமுடியுமா? அங்கேயே 'சம்மதமா' என்று பெற்றோர்/அண்ணன்கள் கேட்டு நெளியவைத்த அனுபவம் உண்டா?**

# முன்பே பகிர்ந்து விட்டதாக நினைவு.

& இங்கே சென்று பாருங்கள் :

**5. என்ன வாங்கிக்கொடுத்தாலும் என்ன செய்தாலும் திருப்தி அடையாதவர்கள் பெண்கள் என்று உபநிஷத்துகள் கூறுவதில் உண்மையுண்டா?**

# உபநிடதங்கள் அப்படிச் சொல்கிறதா என்று தெரியவில்லை. பொதுப்படையாகச் சொல்லப் படுவது எல்லாருக்கும் பொருந்தாது. ஆணோ பெண்ணோ, நீடித்த அல்லது நிரந்தர திருப்தி என்பது எளிதில் கிடைப்பது அல்ல.
& நம்ம வாசகிகள் எல்லோரும் வந்து இதற்கு பதில் சொல்லி, நெ த சந்தேகத்தைத் தீர்க்கவும்!

= = =

சென்ற வாரம் குறிப்பிட்டிருந்தது போல, 2020 ஆம் ஆண்டு திங்கள் / செவ்வாய் பதிவுகளின் விவரங்கள் இப்போ பார்ப்போம்.
திங்க கிழமைப் பதிவுகள் :

| பதிவிட்டவர் | பதிவுகள் |
|---|---|
| பானுமதி வெங்கடேஸ்வரன் | 14 |
| ரமா ஸ்ரீநிவாசன் | 12 |
| கீதா ரெங்கன் | 11 |
| நெல்லைத்தமிழன் | 4 |
| அதிரா | 4 |
| ஸ்ரீராம் | 4 |
| மதுரைத்தமிழன் | 1 |
| கீதா சாம்பசிவம் | 1 |
| கௌதமன் | 1 |

**முதல் மூன்று இடங்களைப் பிடித்தவர்களுக்கு எங்கள் பாராட்டுதல்கள்.**

**அதிகம் பேர் படித்த சமையல் பதிவு : கத்தரிக்காய் பனீர் பிரட்டல் - அதிரா ரெசிப்பி** https://engalblog.blogspot.com/2020/01/blog-post_13.html

**அதற்கு அடுத்தபடியாக : 'நம்ம வீட்டு' மிளகுக்குழம்பு! - ரமா ஸ்ரீனிவாசன் ரெசிப்பி** https://engalblog.blogspot.com/2020/02/blog-post_17.html

**அதற்கும் அடுத்த இடம் :மசாலா சப்பாத்தியும், வரமிளகாய் சாஸும் - ஸ்ரீராம்** https://engalblog.blogspot.com/2020/02/blog-post_3.html

## மின்நிலா 035

**செவ்வாய் கதை பதிவுகள் :**

| | |
|---|---|
| ஜீவி | 20 |
| துரை செல்வராஜு | 16 |
| கீதா ரெங்கன் | 4 |
| பானுமதி வெங்கடேஸ்வரன் | 3 |
| ரமா ஸ்ரீநிவாசன் | 2 |
| அப்பாதுரை | 2 |
| ஏகாந்தன் | 1 |
| நெல்லைத்தமிழன் | 1 |
| பரிவை சே குமார் | 1 |
| கமலா ஹரிஹரன் | 1 |
| கீதா சாம்பசிவம் | 1 |

**ஜீவி சார் எழுதியவைகளில் 4 தொடர்கதை , 7 சிறுகதை.**
**துரை செல்வராஜு எழுதியவைகள் 1 இரு வாரத் தொடர். 14 சிறுகதைகள்.**

**எனவே அதிகக் கதைகள் என்ற கணக்கில், துரை செல்வராஜு இந்த வருடமும் முதலிடம் பெற்றுள்ளார்.**

**அதிகம் பேர் படித்த கதை : கல்யாண காலம் - துரை செல்வராஜூ** https://engalblog.blogspot.com/2020/05/blog-post.html

**அதற்கு அடுத்த இடம் : புது வீடு - துரை செல்வராஜூ** https://engalblog.blogspot.com/2020/06/blog-post.html

**அதற்கு அடுத்தபடியாக : பூக்களுக்கிடையே கெண்டி - கமலா ஹரிஹரன்** https://engalblog.blogspot.com/2020/02/blog-post.html
இந்தப் பதிவின் கருத்துரைகளைப் படிக்க : சுட்டி
**மீண்டும் முதல் பக்கம் செல்ல இங்கே கிளிக்குக**

# எங்கள் ஆசிரியர்கள் மின்னூல்கள்





**LINK : INDIA :** https://www.amazon.in/dp/B08BYVY5C3
US : https://www.amazon.com/dp/B08BYVY5C3
UK : https://www.amazon.co.uk/dp/B08BYVY5C3




LINK : INDIA : https://www.amazon.in/dp/B08C2ZGBYJ
US : https://www.amazon.com/dp/B08C2ZGBYJ
UK : https://www.amazon.co.uk/dp/B08C2ZGBYJ

## மின்நிலா 035




**LINK :**
**INDIA :** https://www.amazon.in/dp/B08CXBPPYN
**US :** https://www.amazon.com/dp/B08CXBPPYN
**UK :** https://www.amazon.co.uk/dp/B08CXBPPYN




**LINK : INDIA :** https://www.amazon.in/dp/B08NGRY76W
**USA :** https://www.amazon.com/dp/B08NGRY76W
**UK :** https://www.amazon.co.uk/dp/B08NGRY76W

**மீண்டும் முதல் பக்கம் செல்ல இங்கே கிளிக்குக**

## கதம்பம் : ஸ்ரீராம்

## அடைசல் இல்லம் - குப்பை வீடு

**வீடு எப்பவும் அடைசலா, குப்பையாக காட்சி அளிப்பது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

**இதென்ன கேள்வி? அப்படி இருக்கக் கூடாது என்றுதான் சொல்வீர்கள்.**

**எவ்வளவு சுத்தம் செய்தாலும் அடைசலாகவே காட்சி அளிக்கும். இரண்டு நாட்கள் கூட அதை மெயின்டெயின் செய்ய முடியாது. உதாரணமாக ஒரு நாற்காலியை ஓரமாகப் போடுகிறோம் என்று வையுங்கள்... முதலில் அதில் ஒரு புடைவை தொங்கும். அப்புறம் ஒரு துண்டு. அப்புறம் வேறு ஏதாவது ஒரு பொருள்.. அப்புறம் அதில் உட்கார முடியாத அளவு வெவ்வேறு பொருட்கள் வைக்கப்பட்டிருக்கும். ஒரு ஸ்டூல் இருந்தால் அதன்மேல் சில புத்தகங்கள், அல்லது பாத்திரங்கள்.. அது அது அதன் உண்மையான உபயோகத்தை விட இந்த மாதிரி உபயோகத்துக்குதான் உதவும்!**

**பீரோக்களின் மேல்பகுதிகள், மேஜையோ எங்கும் கண்ணில் பட்டுவிடக் கூடாது. அதன்மேல் சம்பந்தமில்லாத பொருட்கள் அமர்ந்தவண்ணம் இருக்கும். நான் என் துணிகளை பீரோவில் வைத்திருந்தாலும், இந்தக் கொரோனா காலத்தில் போடுவதற்கு என்று ஐந்து செட் துணிகளை மட்டும் வெளியில் வைத்திருக்கிறேன். என் கட்டிலில் ஓரமாக அவ்வப்போது அலசி மடித்து வைத்திருப்பேன். வெளியிலிருந்து வந்ததும் அதை அலசி காயவைத்து, மடித்து வரிசையின் அடியில் வைத்துவிடுவேன். சலவை செய்யும் வழக்கம் எல்லாம் இல்லை. ஒரு நாளைக்கு இரண்டு முறை அலசும் துணிகளுக்கு சலவை என்ன வேண்டி கிடக்கிறது! அந்தத் துணிகளை பார்த்ததும்**

மற்றவ யாருக்கும் அவர்கள் துணிகளை அதே இடத்தில போடும் ஆவல் வந்து விடுகிறது. கொஞ்ச நாள் கழித்துப் பார்த்தால் துணிக்குவியலாய் இருக்கும். நான் அடுத்து போடப்போகும் செட் எங்கிருக்கிறது என்று தேடவேண்டும்!

கையில் எடுத்த பொருட்களை வேலை முடிந்ததும் நின்ற இடத்தில், கைக்கு வந்த இடத்தில் வைத்து விடும் வழக்கம்... வீட்டை நீட் செய்ய என்று ஒரு நாள் செலவு செய்வோம். அடுத்த இரண்டு நாட்களில் மழைத்துளி விழுந்து ஈரமாகும் காய்ந்த நிலம் போல மறுபடியும் ஆங்காங்கே பொருட்கள் இறைந்து காணப்படத் தொடங்கும்!

பீரோக்களின் மேல் பார்த்தால் ஊரில் இருக்கும் பொருட்கள் எல்லாம் அங்கு இருக்கும். வீட்டில் உள்ள பரண்கள் ஏற்கெனவே ஹவுஸ்புல். முன்பு டைனிங் டேபிள் வைத்திருந்தோம். அதன்மேலும் அப்படிதான் துணிகள் உட்பட எல்லா குப்பையும் இருக்கும். நல்லவேளையாய் இப்போது அது இல்லை. தரையில் அமர்ந்து சாப்பிடுகிறோம்.

ஆனாலும் பாருங்கள்... சமையலறையின் சுவர் ஓரங்களில் எல்லாம் குட்டிக்குட்டிப் பாத்திரங்களில் என்னென்னவோ இருக்கும்.

அவ்வப்போது நிறைய பொருட்களைக் கழித்துக்கட்டிக் கொண்டே இருந்தாலும் எவ்வளவு பொருட்கள் இன்னும்? இவ்வளவு பொருட்களா வாங்கி குவித்திருக்கிறோம் என்று தோன்றும். ஒவ்வொன்றுக்கும் எப்போதாவது ஏதாவது தேவை இருக்கும் என்று வாங்கி ஸ்டாக் வைத்திருப்பார்கள்.

'பின்னே? ஒரு குடும்பம்னா சும்மாவா ? வீடு லைவ்லியா இருக்குன்னு நினையுங்களேன்' என்பார் பாஸ். 'அப்படிநீட்டா இருக்கணும்னா நீங்கள் கல்யாணமே பண்ணியிருக்கக் கூடாது!' என்பார். ஆமாம், காலங்கடந்த ஞானோதயம்! ஆனாலும் ஒரு சுத்தத்தை

எதிர்பார்க்கும் என் மனம். ரொம்ப சுத்தமாய், எல்லாம் வைத்த இடத்தில் அப்படியே, காலியாக இருந்தாலும் போர் அடிக்குமோ! மேஜர் சந்திரகாந்த் மேஜர் நினைவுக்கு வருகிறார்!

இவ்வளவும் இருந்தும் நாம் தேடும் பொருள் தேடும் நேரத்தில் கிடைக்காது. அப்புறம் தேவைப்படாத நேரத்தில், வேறு எதையோ தேடும் நேரத்தில் இது சிக்கும். அததற்கென்று ஒரு இடம் என்று வைக்கவே முடிவதில்லை.

என்னவோ போங்க....

==============
பேஸ்புக்கில் போட்ட ஒரு பதிவு...

நாம் கட்டமைத்துக் கொள்ளும் மன பிம்பங்களின் வடிவங்களை நம்மாலேயே அவ்வளவு சீக்கிரம் மாற்றிக் கொள்ள முடியாது!

நீண்ட நாட்களுக்குப் பிறகு ரங்கராட்டினம் திரைப்பாடலான "முத்தாரமே" பாடலைக் கேட்கும் வாய்ப்பு கிடைத்தது.

எல் ஆர் ஈஸ்வரியின் குரலை க்ளப் டான்ஸ் பாடல்களுக்கு, நடன மங்கைகளுக்குக் குரல் கொடுத்தே கேட்டு பழகி விட்டேன். அல்லது நாயகியின் தோழிக்கு குரல் கொடுப்பவராய்...

கதாநாயகனுக்குப் பாடும் குரலோடு அவர் குரலைக் கேட்டால் நாயகன் ஏதோ ஆசை நாயகியோடு பாடும் உணர்வு வருகிறது, அல்லது வில்லியுடன் பாடும் உணர்வு வருகிறது!

அதற்காக நான் எல் ஆர் ஈஸ்வரி குரலுக்கு எதிர்ப்பு சொல்கிறேன், எனக்கு அவர் பாடல்கள் பிடிக்காது என்று நினைத்து விடாதீர்கள். நான் அவர் பாடல்களின் பெரும் ரசிகன்.

============
தனிமைத்தாத்தா கவிதைக்கு தனித்திரு விழித்திரு என்று தலைப்பிட்டிருந்தேன். அதற்கு இன்னொரு தலைப்பும்

## மின்நிலா 035

**வைத்திருந்தேன்... இன்னும் ஒரு நாள் என்று வைத்திருந்தேன். அதே பாணியில் இன்னொன்று அப்போதே எழுதி வைத்திருந்தேன். அதை இப்போது வெளியிடுகிறேன்!**

என் வீட்டில்தான்
நான் இருக்கிறேன்.
அடுத்த அறையில் மனைவி
வசிக்கிறாள்.
இருவருக்கும் பொதுவாய்
என்றும் எங்கும் உண்டு
தனிமை.

பெரிய திரைகொண்ட
தொலைக்காட்சியில்
வாரத்துக்கொருமுறை
பார்க்கிறோம்
மகனையும் மகளையும்
அவரவர் குடும்பங்களோடு

வெளிநாட்டில்
அவர்கள் வசித்தாலும்
எங்களுக்கும்
வசதிகள் பண்ணிக்
கொடுத்திருக்கிறான் மகன்.

உணவுக்குக் கவலை இல்லை.
உடைகள் அதிகம் தேவை இல்லை
வசிக்கப் பெரிய வீடும்தான்.

குறையில்லை.
ஏனோ
சந்தோஷமுமில்லை


## மின்நிலா 035

**(இதோடு கவிதையை நிறுத்தி விடலாம். ஆனாலும் அப்புறமும் தோன்றியதை தொடர்ந்திருக்கிறேன்)**

**ஆமாம் ...**
**இதேபோல மகனுக்கான வீடு**
**வெளிநாட்டில் அமையுமா?**
**உள்நாட்டிலா?**
**கேட்கவேண்டும் பேரனிடம்**
**பிறிதொரு ஸ்கைப் மீட்டில்**

=========

**பொக்கிஷம் :**



அபூர்வ சகோதரர்கள்

—நவம்பர், 20

எந்தச் சிக்கலான பிரச்னையாக இருந்தாலும், சிரித்துச் சிந்திக்க வைக் கார்ட்டூன் மூலம் தெளிவாக்கி விடுவது விகடனின் தனிப்பெரும் சிறப்பு. ஆண்டிலிருந்து ஸ்ரீதர் தமது கார்ட்டூன் பணியைத் தொடங்குகிறார்.

1949-ம் ஆண்டில் எம். கே. ராதா, பானுமதி நடித்த ஜெமினி மாபெரும் படைப்பான 'அபூர்வ சகோதரர்கள்' திரையிடப்பட்டது. படம் இன் உயிரோடு இருப்பது போலவே அதன் பெயரைத் தாங்கிய கார்ட்டூனும் உயிரு மிளிர்கிறது. ஆந்திர சகோதரர்கள் சென்னைக்கு உரிமை கொண்டாடிய நா பளிச்சென்று நினைவுக்கு வருகின்றன. டாக்டர் பட்டாபி சீதாராமையா படத்தில் வரும் டாக்டராகச் சித்திரித்திருப்பது எத்தனை பொருத்தமாக இருக்கி


தூக்கு தண்டனை
64



ஆனந்த விகடன்

ANANDA VIKATAN 16.5.'48 விலை 4 அணா

ஒருவர்:- ''உங்க பொண்ணுக்கு கல்யாணம் நிச்சியம் பண்ணிவிட்டேளாமே? ...ஊம்! ...மாப்பிள்ளையை எங்கே வலை போட்டு பிடிச்சேள்?''

நண்பர்:- ''அம்பாசமுத்திரத்திலே ஸார்!''


எதுக்கு இத்தச் சாதாரண வேஸ்டியை, விசிறிமடிப்பா, மடிச்சிருக்கே!
சும்மா அழகா இருக்கும்னு, மடிச்சேனுங்க!
எனக்கெதுக்கப்பா, விசிறிமடிப்பும் கிசிறிமடிப்பும்!
பிரிக்காதீங்க! பிரிக்காதீங்க!
டேய்ய்ய்!..... பெரிய கில்லாடி-யப்பா நீ! வேட்டியைக் கிழிச்சுட்டு அதை மறைக்கவா இந்த வேலை! உம்!
'??'
கோபலு

**இந்த எம் சீல் விளம்பரம் பார்த்திருக்கிறீர்களா? சுவாரஸ்யமான விளம்பரம். ஒரு சிறுகதையைப்போல...**

VIDEO LINK

இந்தப் பதிவின் கருத்துரைகளைப் படிக்க : சுட்டி

**மீண்டும் முதல் பக்கம் செல்ல இங்கே கிளிக்குக**

# படம், பாட்டு, தகவல் & காணொளி :: ஸ்ரீராம்

## பொங்கலோ பொங்கல்

1954 ல் வெளியான படம் பொன்வயல். நடிகர் டி ஆர் ராமச்சந்திரன் தயாரித்து கதாநாயகனாக நடித்த திரைப்படம். படமே காணாமல் போய்விட்டதாம். தியேட்டரிலிருந்து மட்டுமல்ல, படச்சுருளே காணோமாம். கல்கி எழுதி கல்கியில் தொடராக வந்த பொய்மான் கரடு கதையைத்தான் டி ஆர் ராமச்சந்திரன் படமாக எடுத்து நடித்தார். கதாநாயகியாக நடித்தவர் அஞ்சலிதேவி.

சுத்தானந்த பாரதியாரின் பாடலுக்கு இசை துறையூர் ராஜகோபால சர்மா. பொங்கலுக்காக அதிலிருந்து ஒரு பாடல். என் எல் கானஸரஸ்வதி குரலில் பொங்கலோ பொங்கல் என்கிற பாடல்! நான் கேட்டதில்லை. நீங்கள் எத்தனைபேர் கேட்டிருப்பீர்கள் என்று தெரிந்துகொள்ள ஆவல்.\

**VIDEO LINK**

**1972 ல் வெளிவந்த மாப்பிள்ளை அழைப்பு எனும் பப்படத்தில் வெள்ளிக்கிழமை நாயகன் ஜெய்சங்கர்-மற்றும் விஜயலலிதா நடித்திருக்கின்றனர். இசை வி. குமார். பாடல்கள் வாலி. படம் பற்றி பேச பெரிதாக ஒன்றுமில்லை. தேடினாலும் விவரம் கிடைக்காது. முழுப்படம் யு டியூபில் கிடைக்கறது! விரும்புபவர்கள் பார்க்கலாம்.**

**நமக்குத்தேவை இந்தப் படத்தில் இடம்பெற்ற ஒரு அருமையான எஸ்பிபி பாடல்! (உனக்கு எல்லாமே அருமைதான் என்று மைண்ட்வாய்ஸ் விடுபவர்கள் பாடலைக் கட்டாயம் கேட்கவும்!)**

**வி குமாரின் இனிமையான இசையில் வழக்கம்போல எஸ் பி பி குரல் இனிமை. இதில் வருவது போல இல்லாமல் ரேடியோவில் கேட்கும்போது ஒரு சுண்டுவிரல் ஸ்ட்ரிங் சுண்டலைத் தொடர்ந்து தொடங்கும் எஸ் பி பி குரல்...**

## மின்நிலா 035

உள்ளத்தில் நூறு நினைத்தேன்
உன்னிடம் சொல்ல தவித்தேன்

உள்ளத்தில் நூறு நினைத்தேன்
உன்னிடம் சொல்ல தவித்தேன்
ஆசை கோடி பிறக்கும்
ஆசை கோடி பிறக்கும்
அச்சமோ சொல்லாமல் என்னைத்தடுக்கும்
உள்ளத்தில் நூறு நினைத்தேன்
உன்னிடம் சொல்ல தவித்தேன்
.
நூலாடும் சின்ன இடை
மேலாடும் வண்ண உடை
நானாக கூடாதோ தொட்டு தழுவ
நூலாடும் சின்ன இடை
மேலாடும் வண்ண உடை
நானாக கூடாதோ தொட்டு தழுவ

கையோடு என்னை அள்ளி
கண்ணா உன் கண்ணிரண்டும்
கையோடு என்னை அள்ளி
கண்ணா உன் கண்ணிரண்டும்
வாறாதோ பாடாதோ நான் துயில

அஞ்சி வரும் தென்றலுக்கு மயங்கி
முந்தி வரும் ஆசையிலே நெருங்கி
போகப் போக அத்தனையும் விளங்கி
நடக்கட்டும் கதை இன்று தொடங்கி
.
உள்ளத்தில் நூறு நினைத்தேன்
உன்னிடம் சொல்ல தவித்தேன்
.

## மின்நிலா 035

தேராட்டம் பெண்மை ஒன்று
வெள்ளோட்டம் வந்ததென்று
கண்ணோட்டம் சென்றதென்ன என்னைத்தேடி
தேராட்டம் பெண்மை ஒன்று
வெள்ளோட்டம் வந்ததென்று
கண்ணோட்டம் சென்றதென்ன என்னைத்தேடி

பூந்தோட்டம் தன்னைக்கண்டு
நீரோட்டம் போலே இன்று
பூந்தோட்டம் தன்னைக்கண்டு
நீரோட்டம் போலே இன்று
பாராட்ட வந்தேன் இங்கு உன்னைத்தேடி

புத்தகம் போல் பூவே உன்னைப்புரட்ட
பள்ளியறை பாடங்களை புகட்ட
முக்கனியும் சக்கரையும் திகட்ட
முப்பொழுதும் இன்பசுகம் இனிக்க
.
உள்ளத்தில் நூறு நினைத்தேன்
உன்னிடம் சொல்ல தவித்தேன்
ஆசை கோடி பிறக்கும்
ஆசை கோடி பிறக்கும்
அச்சமோ சொல்லாமல் என்னைத்தடுக்கும்
உள்ளத்தில் நூறு நினைத்தேன்
உன்னிடம் சொல்ல தவித்தேன்.

VIDEO LINK

**இந்தப் பதிவின் கருத்துரைகளைப் படிக்க : சுட்டி**

**மீண்டும் முதல் பக்கம் செல்ல இங்கே கிளிக்குக**

# நல்ல செய்திகள்

## முதல் முறையாக தலைமை தகவல் அதிகாரி பதவி.




அமெரிக்க ராணுவத்தின் தலைமை தகவல் அதிகாரியாக சென்னையை சேர்ந்த ராஜ் அய்யர் என்பவர் நியமிக்கப்பட்டு உள்ளார். இவர் திருச்சி என்.ஐ.டியில் பி.டெக் படித்துள்ளார். பின் பெங்களூருவில் பொறியல் துறையில் ஆராய்ச்சி முடித்து முனைவர் பட்டம் பெற்றுள்ளார். அமெரிக்கவிற்கு சென்று 25 ஆண்டுகளுக்கு மேலாக ராணுவத்தில் பணியாற்றி வருகிறார். அமெரிக்க ராணுவத்தின் தலைமை தகவல் அதிகாரியாக தமிழர் நியமிக்கப்பட்டு இருப்பது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடதக்கது. ராஜ் அய்யருக்கு கிடைத்த தலைமை பதவி 3 நட்சத்திர தளபதி பதவி அந்தஸ்துக்கு சமமானதாகும். இவருக்கு கீழ் 15 ஆயிரம் வீரர்கள் உலகெங்கும் உள்ள 100 நாடுகளில் பணியாற்றுகின்றனர். 1600 கோடி டாலர் மதிப்பிலான ராணுவ தளவாட கொள்முதலை மேற்பார்வை செய்ய உள்ளார். ராஜ் அய்யர் மனைவி பிருந்தா தகவல் தொழில்நுட்ப சுகாதார தொழில் நிபுணர். இவரும் அமெரிக்க அரசில் பணி புரிந்து வருகிறார்.

= = = =

## மின்நிலா 035

ராணுவ விமான பிரிவில் பெண் விமானிகளுக்கு ஒப்புதல்.

புதுடில்லி : ராணுவத்தின் விமானப் பிரிவில், பெண் அதிகாரிகளை விமானிகளாக நியமிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

ராணுவத்தில் உள்ள போலீஸ் பிரிவில், பெண்களை நியமிக்க, 2019ல் ஒப்புதல் அளிக்கப்பட்டது. நம் விமானப்படையில், அவனி சதுர்வேதி என்ற பெண் விமானி, 2018ல், முதல்முறையாக, 'மிக் - 21' ரக போர் விமானத்தை இயக்கி சாதனை படைத்தார்.

இந்த வரிசையில், ராணுவத்தின் விமானப் படைப் பிரிவில், பெண் அதிகாரிகளை விமானிகளாக நியமிக்க, மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

இது குறித்து, ராணுவ தலைமை தளபதி, ஜெனரல் எம்.எம்.நரவானே, செய்தியாளர்களிடம் கூறியதாவது: ராணுவ விமானப் பிரிவின் போக்குவரத்து கட்டுப்பாடு மற்றும் களப் பணிகளில், பெண்கள் ஏற்கனவே ஈடுபடுத்தப்படுகின்றனர். இந்நிலையில், பெண் அதிகாரிகளை விமானிகளாக நியமிக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து, பெண் அதிகாரிகளுக்கான விமானம் ஓட்டும் பயிற்சி, வரும் ஜூலையில் துவங்க உள்ளது. ஒரு ஆண்டு பயிற்சிக்கு பின், ராணுவத்தில் பெண் விமானிகள் பணி செய்யத் துவங்குவர். இவ்வாறு அவர் கூறினார்.

= = = =

ஆட்டோமேட்ட் கார்கள் செல்ல உதவும் ஸ்மார்ட் சாலைகள்; ஹுவவே நிறுவனம் பரிசோதனை.



பெய்ஜிங்: சீனாவின் ஹுவவே நிறுவனம் கடந்த ஆண்டு அமெரிக்காவில் தடை செய்யப்பட்டது. அமெரிக்க உள்நாட்டு மற்றும் அரசு ரகசியங்களை சீன தொழில்நுட்ப நிறுவனமான ஹுவவே திருடுவதாக முன்னாள் அதிபர் டொனால்டு டிரம்ப் அரசு குற்றம் சாட்டி இருந்தது. இதனை தொடர்ந்து தற்போது இந்த சீன தொழில்நுட்ப நிறுவனம் சீனாவின் அடுத்தகட்ட தொழில்நுட்ப வளர்ச்சிக்கு வித்திடும் வகையில் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகிறது.


சீனாவின் ஜியாங்சு மாகாணத்தில் உள்ள குக்ஷி நகரில் நான்கு கிலோமீட்டர் சாலையில் தொழிநுட்ப பரிசோதனை நடைபெற்று வருகிறது. ஆட்டோமேட்டட் கார் தொழில்நுட்பம் தற்போது கார் நிறுவனங்களால் சோதனை செய்யப்பட்டுவரும் நிலையில் டிரைவர் இல்லாத இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்களை வழிநடத்தும் ஸ்மார்ட் சாலைகளை உருவாக்க இந்த நிறுவனம் தற்போது ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளது. இதற்காக இந்த நான்கு கிலோ மீட்டர் சாலை சோதனை செய்யப்படுகின்றது.

இந்த சாலையில் பொருத்தப்பட்டிருக்கும் ரேடார் மற்றும் கேமராக்கள் ஆளில்லாத ஆட்டோமேட்டட் கார்களுடன் தொடர்பு

கொள்ளும். சாலைக்கும் ஆட்டோமேட்டட் கார்களுக்கும் உள்ள தொடர்பு மூலமாக எதிரே வரும் வாகனங்கள், டிராபிக் உள்ளிட்டவற்றை கார்கள் தெரிந்துகொள்ளும். அதற்கேற்ப வாகனத்தின் வேகம் அதிகரிக்கப்படும் அல்லது குறைக்கப்படும். இந்த ஸ்மார்ட் சாலை பரிசோதனை வெற்றிபெற்றால் உலகம் முழுக்க ஆட்டோமேடட் கார்களால் எளிதில் சாலைகளில் இயங்க முடியும்.

இன்னும் 50 ஆண்டுகளில் உலகில் ஓட்டுநர்கள் இல்லாத ஆட்டோமேட்டட் வாகனங்கள் ஸ்மார்ட் சாலைகளில் செல்ல வாய்ப்புள்ளது. இதற்கு வித்திடும் வகையில் தற்போது சீனாவின் ஹுவவே தொழில்நுட்ப நிறுவனம் இந்த பரிசோதனையை மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.
= = = =

**கட்டியைக் கரைக்கும் ஒலி.**



ரத்தக் குழாய்களில் உறைந்துவிடும் ரத்தத்தை, மருந்து, மாத்திரைகளால் கரைப்பது ஒரு வழி. ஆனால், சில நேரங்களில், நோயாளிகளுக்கு இது பலன் தருவதில்லை. எனவேதான், அமெரிக்காவின், வட கரோலினா மாநில பல்கலைக்கழக

ஆராய்ச்சியாளர்கள் அல்ட்ரா சவுண்டு எனப்படும் மீஒலியை பயன்படுத்தி ரத்தக் கட்டியை கரைப்பதில் வெற்றி பெற்றுள்ளனர்.

ரத்தம் கட்டியுள்ள இடத்திற்கு அருகே, நுண்ணிய மீஒலிக் கருவியை ஆராய்ச்சியாளர்கள் செலுத்துகின்றனர். பிறகு, 'பெர்ப்ளூரோ கார்பன்' திரவல்த துளிகளை செலுத்தி, மீஒலி அதிர்வலைகளை ஏற்படுத்துகின்றன. பெர்ப்ளூரோ திரவத் துளிகளை, அதிக ஆற்றலுடன் ஒலிகளைகள் அதிரவைத்து, ரத்தக் கட்டியை அக்கருவி கரைத்துவிடுகிறது

மீஒலி, பெர்ப்ளூரோ கார்பன் துளிகள், ரத்தக் கட்டியைக் கரைக்கும் மருந்து, ஆகிய மூன்றும் கலந்த சிகிச்சை நல்ல பலனைத் தருவதாக, வட கரோலினா ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். புதிய சிகிச்சை முறை, நாள்பட்ட ரத்தக் கட்டிகளைக் கரைப்பதற்கு பயன்படும். அதுமட்டுமல்ல, மீஒலி அதிர்வலைகள், கட்டியைக் கரைக்குமே தவிர, அருகே உள்ள ரத்தக் குழாய் சுவர்களை எந்த விதத்திலும் பாதிப்பதில்லை. இது கூடுதல் பலன்.
= = = =

45 ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த குகை ஓவியம்: இந்தோனேசியாவில் கண்டுபிடிப்பு.

ஜகார்த்தா: கடந்த புதனன்று சயின்ஸ் அட்வான்ஸ் என்ற இதழில் உலகின் பழங்கால குகை ஓவியம் குறித்த தகவல்கள் வெளியிடப்பட்டன. இது சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. இந்தோனேஷியாவில் 45 ஆயிரத்து 500 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த மனிதர்கள் வரைந்துள்ள ஓர் பன்றி குகை ஓவியம் பழம்பொருள் ஆராய்ச்சியாளர்களால் கண்டறியப்பட்டுள்ளது.



இதுகுறித்து ஆஸ்திரேலியாவின் கிரிஷிப்ட் பல்கலைக்கழக பேராசிரியர் மாக்ஸிம் ஆல்பர்ட் கூறுகையில், இந்தோனேஷியாவில் உள்ள சுலாவெசி தீவில் கடந்த 2011-ஆம் ஆண்டு பழம்பொருட்கள் குறித்து ஆராய்ச்சி நடத்தப்பட்டது. அப்போது அங்கு இருந்த பழமையான லிங்க்ஸ்டேட் குகைக்குள் உள்ள லைம்ஸ்டோன் வகை கற்கள் குறித்து ஆராய்ச்சி நடந்தது.

அப்போது 136 செ.மீ., நீளமும் 54 செ.மீ., அகலமும்கொண்ட ஓர் பன்றியின் ஓவியம் ஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டது. ஒரு பன்றி மற்றொரு பன்றியை நோக்கி இருப்பதுபோல இந்த பழங்கால ஓவியம் காட்சியளிக்கிறது. மற்றொரு பன்றியின் ஓவியம் சிதிலமடைந்துள்ளது. இந்தோனேசியாவின் இந்த தீவில் கடந்த 45 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த பழங்குடியினர் இதனை வரைந்து இருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் கணித்துள்ளனர். இது தற்போது பழம்பொருள் பிரியர்கள் மத்தியில் இணையத்தில் வைரலாகி வருவது குறிப்பிடத்தக்கது.


## இந்தப் பதிவின் கருத்துரைகளைப் படிக்க : சுட்டி

மீண்டும் முதல் பக்கம் செல்ல இங்கே கிளிக்குக

# பேசும் படங்கள் :: kayjees

## மைசூர் மி கா சா படங்கள்

**பாட்டரி பஸ் எப்போ வரும் என்று காத்திராமல் ஆங்காங்கு பிடித்த படங்கள்**



### மின்நிலா 035

# இரண்டு நாடாக்கள் போட்டிருக்கவேண்டும்?



## பிராணியின் முகம் எங்கே?



# இதுவா ?



# புலிகள் பலவிதம்



# வேங்கைப்புலி



# உறங்கும் புலி



# உறங்காப்புலி !



# வெள்ளைப்புலி



# உண்டமயக்கமோ?




# பெசன்ட்



# மயில் கழுத்து மேகவர்ணம்?





**ஒரு சுற்று சுற்றி வந்துட்டீங்களா ?**



**இந்தப் பதிவின் கருத்துரைகளைப் படிக்க : சுட்டி**

**உங்களைப்பற்றி  நீங்கள்**

**வாரம் ஒரு வலைப்பதிவர்/ வாசகர் என்ற தலைப்பில்,**
**எங்கள் ப்ளாக் வாசகர்கள் எழுதுகின்ற வலைப்பூக்கள்**
**பற்றி மின் நிலாவில் அடுத்த வாரத்திலிருந்து எழுத**
**இருக்கிறோம்.**
**வலைப்பூவர்களும், வலைப்பூவையர்களும்,**
**வலைமொட்டுகளும் வாசகர்களும் தங்கள் பெயர்,**
**வலைப்பூ பெயர், வலைப்பூ சுட்டி ஆகிய விவரங்களுடன்,**
**தங்கள் வலைப்பூவில் எந்த விஷயங்களுக்கு அவர்கள்**
**முன் உரிமை கொடுத்து எழுதுகிறார்கள் , என்பதையும்,**
**அவர்களை எழுத வைப்பது எது - அல்லது 'நான் ஏன்**
**எழுதுகிறேன்' என்ற தலைப்பில் அவர்களைப் பற்றிய**
**ஒரு சுயபுராணமும் எழுதி, அதை**
engalblog@gmail.com
**என்னும் மின்னஞ்சலுக்கு அனுப்பிவைக்கும்படிக்**
**கேட்டுக்கொள்கிறோம்.**
**வலைப்பூ நடத்தாத எங்கள் ப்ளாக் வாசகர்கள்,**
**அவர்களைப் பற்றியும், அவர்களுடைய படிக்கும் ஆர்வம்**
**மற்றும் எழுதும் ஆர்வம் குறித்தும் எழுதி அனுப்பலாம்.**
**எங்களுக்கு வந்து சேரும் அதே வரிசையில், வாரம்**
**ஒருவர் பற்றிய விவரங்களை வெளியிடுகிறோம்.**
**எங்கள் ப்ளாக் ஆசிரியர்கள் குழு.**

**இந்த மின்நிலா இதழ் பற்றிய உங்கள் கருத்துகளை,**
engalblog@gmail.com
**என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும் !**

வெளியே - - -



உள்ளே - - -



என்ன ஆச்சு அவனுக்கு? ஏன் பறந்து போயிட்டான்?